www.Padasalai.Net www.CBSEtips.in

152 | 45

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2023

பதிவெண்

## IX - தமிழ்

நேரம் : 1.15 மணி மதிப்பெண்கள் : 50

(செய்யுள் - உரைநடை, இலக்கணம், கட்டுரை, கடிதம்)

## பகுதி - I

### பிரிவு - அ

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (10x1=10)

1. காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! - எந்தக் காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே! - இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை

இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

2. மல்லல் மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

3. கூவல் என்று அழைக்கப்படுவது எது?

அ) உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை

ஆ) குளிப்பதற்கேற்ற குளம்

இ) அடியிலிருந்து நீர் ஊருவது

ஈ) அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு

4. ஐம்பெருங்குழு எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

5. மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் ____ எனத் தமிழ்விடு தூது குறிப்பிடுகிறது

அ) ஆறு ஆ) ஐந்து இ) நான்கு ஈ) மூன்று

6. தமிழ்விடு தூதின் ஆசிரியர்

அ) ஈரோடு தமிழன்பன் ஆ) ஆசிரியர் பெயர் அறியப்படவில்லை

இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) சேக்கிழார்

7. 'பக்திச்சுவை' நனி சொட்டச் பாடிய கவிவலவ' என்று பாராட்டப்பட்டவர்

அ) இளங்கோவடிகள் ஆ) மீனாட்சி சுந்தரனார்

இ) சேக்கிழார் ஈ) தமிழ்ஒளி

8. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) நீரின்றி அமையாது உலகு - திருவள்ளுவர்

ஆ) நீரின்று அமையாது யாக்கை - ஔவையார்

இ) மாமழை போற்றதும் - இளங்கோவடிகள்

அ) அ, இ ஆ) ஆ, இ இ) அ, ஆ ஈ) அ, ஆ, இ

9. மிசை என்பதன் பொருள் ______

அ) கீழே ஆ) மேலே இ) அருகில் ஈ) தொலைவில்

10. மனிதனையும் விலங்குகளையும் ______ மொழியாகும்

அ) வேறுபடுத்துவது ஆ) ஒற்றுமைப்படுத்துவது

இ) தனிமைப்படுத்துவது ஈ) ஒப்புமைப்படுத்துவது எது



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## பிரிவு - ஆ

**II.** பொருத்தமான பெயரடைகளையும், வினையடைகளையும் தேர்ந்தெடுத்து எழுதுக. *(5x1=5)*

(கொடிய, இனிய, நல்ல, அழகாக, வேகமாக)

11. அவன் ______ நண்பனாக இருக்கிறான்.
12. ______ விலங்கிடம் பழகாதே.
13. காலம் ______ ஓடுகிறது.
14. சங்க இலக்கியம் வாழ்க்கையை ______ காட்டுகிறது.
15. எல்லோருக்கும் ______ வணக்கம்.

## பகுதி - II (மதிப்பெண்கள் : 10)

## பிரிவு - அ

**III.** எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. *(5x2=10)*

16. 'கண்ணி' என்பதன் விளக்கம் யாது?
17. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக்குடும்பத்தைச் சார்ந்தது?
18. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது.
19. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
20. கலைச்செற்களை மொழிபெயர்க்க.

    1. Literature    2. Water Management
21. உங்கள் வயதையும், வகுப்பையும் தமிழ் எண்களில் எழுதுக.

## பகுதி - III

## பிரிவு - அ

**IV.** எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி. *(3x4=12)*

22. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?
23. சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
24. தன்வினை பிறவினை - வேறுபாடு இரண்டு கூறு.
25. மழைநீரை வீணாக்காமல் எவ்வாறெல்லாம் சேமிக்கலாம்?
26. பட்டமரத்தின் வருத்தங்கள் யாவை?

## பிரிவு - ஆ

**V.** 27. தித்திக்கும் எனத்தொடங்கும் தமிழ்விடு தூது பாடல். *(1x5=5)*

(அல்லது)

நீர் இன்றி அமையா யாக்கைக்கு....... எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்.

## பகுதி - IV

## பிரிவு - அ

**VI.** விரிவான விடையளி. *(1x8=8)*

28. தண்ணீர் கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

(அல்லது)

உங்கள் நண்பர் பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின் 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com